සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | | |
|---|---|---|---|
| චිත්‍ර කලාව I<br>சித்திரக்கலை I<br>Art I | 51 T I | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

சுட்டெண் : ..............................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி I**
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**
- **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
- **ஒவ்வோர்** உப பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதம் தெரிவுசெய்து, **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.


※ பகுதி **I**, பகுதி **II** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| வினாத்தாள் I | |
|---|---|
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி I

- **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையை **A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


A

B

C

D

E

**1.** **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சந்திரவட்டக்கல் செதுக்கலைக் காணக்கிடைப்பது,
(1) யாப்பகூவ தலதா மாளிகையிலாகும்.
(2) மெதிரிகிரிய வட்டதாகேயிற்கு அருகிலாகும்.
(3) கண்டி தலதா மாளிகையிலாகும்.
(4) லங்காதிலக்க விகாரையிலாகும்.
(5) தெகல்தொருவ ரஜமகா விகாரையிலாகும். (.........)

tamilguru.lk

**2.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் அமைந்திருப்பது,
(1) பனாவிட்டிய அம்பலத்திலாகும்.
(2) யாப்பகூவ தலதா மாளிகையின் விறாந்தையிலாகும்.
(3) கடலாதெனிய விகாரையின் விறாந்தையிலாகும்.
(4) கண்டி மகுல்மடுவையிலாகும்.
(5) லங்காதிலக்க விகாரையிலாகும். (.........)

tamilguru.lk

**3.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) கிரேக்கத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றாகும்.
(2) கிரேக்கத்தில் காணக்கிடைக்கும் அயோனிக் மரபுக்குரியதொரு பீடமாகும்.
(3) கிரேக்கத்தின் அதென்ஸ் நகரத்திலமைந்துள்ள ஒலிம்பியா தேவாலயமாகும்.
(4) டொரிக் தூணினால் அலங்கரிக்கப்பட்ட பார்த்தினன் தேவாலயமாகும்.
(5) மிகப்பெரிய தூண்களின் மீது கட்டப்பட்ட கிரேக்கத்தின் பழமையானதொரு தேவாலயமாகும். (.........)

**4.** **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கலினால் சித்திரிக்கப்படுவது,
(1) சிவபெருமான் தொடர்பான புராணக் கதையொன்றாகும்.
(2) இராவணன் கைலாய மலையை அசைத்தபோது சிவபெருமான் அதனைத் தடுக்கின்றமையாகும்.
(3) சிவபெருமானும் உமாதேவியாரும் கைலாயத்தில் காதலில் நிலைத்திருத்தலாகும்.
(4) அசுரர்கள் தொடர்பான செய்தியை, துர்க்கை சிவபெருமானிடம் தெரிவித்தலாகும்.
(5) சிவபெருமான், உமாதேவியார் திருமணமாகும். (.........)

[பக். 2 ஐப் பார்க்க

**5.** **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிற்பம் கிடைக்கப்பெற்றது,
(1) சாஞ்சி தோரணச் செதுக்கல்களில் இருந்தாகும். (2) பாருத் கல்வேலியின் செதுக்கல்களில் இருந்தாகும்.
(3) அமராவதி சைத்தியத்தின் சுவரில் இருந்தாகும். (4) அமராவதி கல்வேலியில் இருந்தாகும்.
(5) சாஞ்சி கல்வேலிச் செதுக்கல்களில் இருந்தாகும். (.........)

- **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**6.** இலங்கையில் வரலாற்றுக்கு முந்திய கால ஓவியங்களில், 'கொம்பன் யானையும் குட்டியும்' என்ற ஆரம்பநிலை ஓவியத்தைக் காணக்கிடைப்பது,
(1) தந்திரிமலையிலாகும். (2) பட்டதொம்ப குகையிலாகும்.
(3) தொரவக்க குகையிலாகும். (4) பில்லாவ குகையிலாகும்.
(5) கொனாகொல்ல குகையிலாகும். (.........)

**7.** செங்கற்களினால் நிர்மாணிக்கப்பட்ட, உலகின் அதியுயர்ந்த கட்டடமாகக் கருதப்படுவது, இலங்கையிலுள்ள
(1) ருவன்வெலிசாய ஆகும். (2) ஜேதவன தாதுகோபுரம் ஆகும்.
(3) அபயகிரி தாதுகோபுரம் ஆகும். (4) விஜயோத்பாய ஆகும்.
(5) லோவாமகாபாய ஆகும். (.........)


**8.** வர்ணப் பயன்பாட்டின்போது பல்வேறு கலை நுட்பங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்படும் கிராமியக் கலைக் கைத்தொழில்,
(1) முகமூடிக் கைத்தொழிலாகும். (2) தும்பறை பாய்க் கைத்தொழிலாகும்.
(3) உலோகக் கைத்தொழிலாகும். (4) அரக்குக் கைத்தொழிலாகும்.
(5) மட்பாண்டக் கைத்தொழிலாகும். (.........)

**9.** அனுராதபுரக் காலத்துக்குரிய இச்சிற்பங்களுள் உன்னதமான கற்சிற்பமாகக் கருதப்படுவது,
(1) ரன்மசு உயனவிலுள்ள பிராணிகளின் சிற்பமாகும்.
(2) மிரிசவெட்டிய வாஹல்கட சிற்பமாகும்.
(3) வைரவரின் உருவத்தைக் கொண்ட காவற்கல் சிற்பமாகும்.
(4) மிகிந்தலை கண்டக சைத்தியவின் வாஹல்கட சிற்பமாகும்.
(5) ருவன்வெலிசாயவின் வாஹல்கட சிற்பமாகும். (.........)

**10.** அனுராதபுர காலத்திற்குரிய மிகப் பழமையான பௌத்த ஓவியங்களாகக் கருதப்படுபவை,
(1) திம்புலாகலை மாராவீதி குகை ஓவியங்களாகும்.
(2) மகியங்கனை தூபியின் ஓவியங்களாகும்.
(3) சிகிரியாவின் குகை ஓவியங்களாகும்.
(4) புள்ளிகொட குகை ஓவியங்களாகும்.
(5) ஹிந்தகல கற்சுவர் ஓவியங்களாகும். (.........)

More Past Papers at
tamilguru.lk

- **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை** 1 முதல் 9 வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் புத்தர் சிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.




**11.** இந்த புத்தர் சிலைகளுள் பாரதத்தின் காந்தார குருகுலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலைகள் யாவை ?
(1) 1, 2 (2) 1, 4 (3) 1, 5 (4) 2, 4 (5) 2, 5 (.........)

**12.** இவற்றுள் மதுரா குருகுலத்துக்குரிய சிலைகள் யாவை ?
(1) 1, 5 (2) 1, 8 (3) 3, 5 (4) 4, 5 (5) 5, 7 (.........)

**13.** இந்தியாவின் குப்தர்கால செல்வாக்கிற்குட்பட்டு நிர்மாணிக்கப்பட்ட சிலைகள் யாவை ?
(1) 1, 3, 4 (2) 3, 4, 5 (3) 3, 4, 6 (4) 3, 4, 7 (5) 7, 8, 9 (.........)

**14.** இவற்றுள் பல்லவர்களின் செல்வாக்கிற்குட்பட்டு நிர்மாணிக்கப்பட்ட சிலை எது ?
(1) 5 (2) 6 (3) 7 (4) 8 (5) 9 (.........)

**15.** இவற்றுள் அமராவதி கலைப் பண்புகளைக் காணத்தக்க சிலைகள் யாவை ?
(1) 4, 8 (2) 5, 8 (3) 7, 8 (4) 7, 9 (5) 8, 9 (.........)

[பக். 3 ஐப் பார்க்க

● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.

**16.** பொலன்னறுவை திவங்க சிலைமனையின் பழமையான ஓவியங்களினால் சித்திரிக்கப்படுவது,
(1) புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்களாகும்.
(2) பௌத்த சமய வரலாற்றுச் சம்பவங்களாகும்.
(3) புத்த ஜாதகக் கதைச் செய்திகளாகும்.
(4) இறைவன், போதிசத்துவர் எண்ணக்கருக்கள் பற்றிய செய்திகளாகும்.
(5) தேரவாதக் கொள்கை பற்றிய செய்திகளாகும். (.........)

**17.** பொலன்னறுவையின் இந்துக் கோயில்களிலிருந்து கிடைக்கப்பெற்ற சிலைகள்,
(1) தென்னிந்தியாவிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டவையாகும்.
(2) திராவிடக் கலைஞர்களால் இங்கு வார்த்துத் தயாரிக்கப்பட்டவையாகும்.
(3) தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவையும் இங்கு தயாரிக்கப்பட்டவையுமாகும்.
(4) இலங்கையில் காணப்பட்ட வார்ப்புக்கலை நுட்பங்களுக்கமைய உள்நாட்டுக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்டவையாகும்.
(5) இலங்கைக் கலைஞர்களால் திராவிட எண்ணக்கருக்களுக்கமைய நிர்மாணிக்கப்பட்டவையாகும். (.........)


**18.** முகலாய, ராஜ்பூட் ஆகிய பெயர்களினால் அறியப்படும் ஓவிய மரபுகள் இரண்டும்,
(1) ஒன்றுக்கொன்று சமமான தொனிப்பொருள்களில் ஓவியங்கள் வரையப்பெற்ற சமகால நிறுவனங்களாகும்.
(2) முகலாய மன்னர்களால் இந்தியாவின் மத்திய, மலைநாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கலை நிலையங்களாகும்.
(3) முறையே சமயத் தொனிப்பொருளையும் லௌகீகத் தொனிப்பொருளையும் சித்திரிப்பனவாகும்.
(4) முறையே அரச தொனிப்பொருளையும் இந்து சமய, இலக்கியத் தொனிப்பொருளையும் சித்திரிப்பனவாகும்.
(5) முறையே அரச தகவல்களையும் சமூகத் தகவல்களையும் சித்திரிப்பனவாகும். (.........)

**19.** இத்தாலிய மறுமலர்ச்சிக் கலைஞர்கள்,
(1) மனித உருவை யதார்த்தமாகச் சித்திரிப்பதில் நிபுணத்துவம் மிக்கவர்கள்.
(2) கோடுகளையும் வர்ணங்களையும் சமனிலையில் கொண்டு ஓவியங்களை வரைந்தனர்.
(3) சிலை நிர்மாணிப்பதை விட ஓவியங்களை வரைவதில் திறமையானவர்களாவர்.
(4) யதார்த்த கலைக் கோட்பாடுகளைச் சிறப்பாக மேம்படுத்தினர்.
(5) கோட்பாடுகளைப் பயன்படுத்தி கருத்து வெளிப்பாட்டு மனித உருவங்களை வரைவதில் தேர்ச்சி மிக்கவர்களாவர். (.........)

**20.** மேல்வருவனவற்றுள் அகவய யதார்த்தவாதக் கலைஞரான போல் க்ளீயின் நிர்மாணிப்புகள் யாவை ?
(1) இறவாத ஞாபகம், கப்பல் புறப்பட்டுச் செல்லல்
(2) கப்பல் புறப்பட்டுச் செல்லல், சென்சியோ
(3) தனது உருவம், சென்சியோ
(4) அசூரின் தங்கம், பிறந்தநாள்
(5) நானும் எனது ஊரும், சென்சியோ (.........)


● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் உருவப்படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

**21.** இங்கு காட்டப்பட்டுள்ள நீர்த்தடாகம்,



(1) வட்டமாக ஒழுங்கமைக்கப்பட்ட கற்களைச் சேகரித்துச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.
(2) ஆலாகண பிரிவெனா பிரதேசத்தில் காணத்தக்க தடாகமாகும்.
(3) பொலன்னறுவைக் கலைஞரின் தடாக நிர்மாணிப்பின் விசித்திரமானதொரு படைப்பாகும்.
(4) இயற்கைப் படைப்பொன்றின் விசித்திரமான தன்மையை கலை நிர்மாணத்துக்காகப் பயன்படுத்தியுள்ளமையாகும்.
(5) கற்பாறையைக் குடைந்து வட்டவடிவத்தை உருவாக்கிச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும். (.........)


**22.** இங்கு காட்டப்பட்டுள்ள அஜந்தா குகையானது,



(1) பிக்குமாரின் தங்குமிடமாகப் பயன்படுத்தப்பட்டதாகும்.
(2) அலங்கார செதுக்கல்களைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) பிக்குமாரின் தர்ம உபதேச மண்டபங்களாகவும் ஒன்றுகூடல் மண்டபங்களாகவும் பயன்படுத்தப்பட்டதாகும்.
(4) உட்பகுதியில் ஓவியங்களையும் சிற்பங்களையும் கொண்டதாகும்.
(5) உட்பகுதியில் தூண்களையும் தூபியின் மாதிரியையும் கொண்டதாகும். (.........)


[பக். 4 ஐப் பார்க்க

**23.** கடற்கரைக் கோயில் எனப்படும் இது,



(1) மீனவர்கள் கடலிலிருந்தவாறே வழிபாடு செய்யத்தக்க விதத்தில் கடலை நோக்கியவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
(2) மகாபலிபுரக் கடற்கரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒன்றுக்கொன்று சமமான இரண்டு கோயில்களாகும்.
(3) மகாபலிபுரக் கடற்கரையில் காணத்தக்க இந்துக் கோயில்களில் ஒன்றாகும்.
(4) கடலில் நீண்ட தூரத்துக்குத் தென்படும் விதத்தில் உயர்ந்த உச்சிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
(5) ரதக் கோயில் கலைநுட்பங்களுக்கமைய கடற்கரையில் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

**24.** இந்தக் கட்டடக்கலை மாதிரியினால் காட்டப்பட்டுள்ள தேவாலயம்,



(1) நைல் நதிக் கரையில் ஹோரஸ் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) தீபசில் நிர்மாணிக்கப்பட்ட லக்ஸோர் தேவாலயமாகும்.
(3) அமொன் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கர்ணாக் தேவாலயமாகும்.
(4) ராம்ஷஸ் அரசனால் நைல் நதிக்கரையில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) மத்திய ராசதானிக் காலத்தில் எகிப்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

**25.** இரண்டாம் இலக்க சிவன்கோயிலென அறியப்படும் இது,



(1) பொலன்னறுவை ராசதானியில் முதன்முதலில் நிர்மாணிக்கப்பட்ட சிவன் கோயிலாகும்.
(2) பதினோராம் நூற்றாண்டில் ராஜேந்திரசோழனின் ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) தென்னிந்திய பல்லவர்களின் கட்டடக்கலை நுட்பங்களுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(4) தென்னிந்திய விஜயநகர கட்டடக்கலை நுட்பங்களுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) பாண்டியர்களின் கட்டடக்கலை நுட்பங்களுக்கமைய 13ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)


- **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் சிலைகளிலிருந்து தெரிவுசெய்க.



F



G



H



I



J

**26.** F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள றிச்சர்ட் கேப்ரியேலின் மரத்தாலான சிலையைக் காணக்கிடைப்பது,
(1) அம்பிட்டிய தேசிய செமனேரியில் ஆகும். (2) தேசிய கலா நிலையத்திலாகும்.
(3) சகல புனிதர்களின் தேவாலயத்திலாகும். (4) பம்பலப்பிட்டி ஜேசுயிட் தேவாலயத்திலாகும்.
(5) கண்டி திரித்துவ தேவாலயத்திலாகும். (.........)

**27.** G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள கணேசர் தெய்வச் சிலையானது,
(1) புத்திக்கூர்மைக்குரிய கடவுளாக பக்தர்களால் போற்றப்படுவதாகும்.
(2) அனைத்து உயிர்களுக்கும் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.
(3) அதிசக்தி வாய்ந்ததாகக் காட்டுவதற்காக யானைத் தலையுடன் சித்திரிக்கப்பட்டதாகும்.
(4) இந்து சமயச் சிலைகளுள் மிருகப் பண்புடன் காட்டப்பட்டுள்ள கடவுள் சிலையாகும்.
(5) சர்வ வல்லமையுடைய கடவுளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். (.........)

**28.** H எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'லியன்னா' எனப்படும் சிலை,
(1) மரபுரீதியானதும் யதார்த்தமானதுமான பண்புகளைக் கொண்டதாகும்.
(2) ஏதேனுமொன்று தொடர்பில் மிக அவதானத்துடன் இருக்கும் ஒருவர் சிலையாக வடிக்கப்பட்டுள்ளமையாகும்.
(3) கீழ்ப்படிவான பணியாளன் ஒருவனைச் சிலையாக வடிப்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(4) ஏதேனுமொன்றைக் கேட்டு எழுதத் தயாராய் இருக்கும் ஒருவர் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) ஆவிகளின் உலகில் தன் தலைவருக்குப் பணியாற்ற அர்ப்பணிப்புடனிருக்கும் ஒருவர் சிலையாக வடிக்கப்பட்டுள்ளமையாகும். (.........)

[பக். 5 ஐப் பார்க்க

4756

**29.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, சிந்துவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட முண்டப்படிமமானது,
(1) சிவப்புச் சுண்ணக்கல்லில் செதுக்கப்பட்ட மனித அளவிலானதொரு சிலையாகும்.
(2) முழுமையான, யதார்த்தபூர்வமான உடலம்சங்களை நேர்த்தியாகப் பூரணப்படுத்தியுள்ள ஒரு சிலையாகும்.
(3) சமய தத்துவமொன்றினால் உருவான பாவம் நிறைந்ததொரு சிலையாகும்.
(4) இந்து சமயப் பூசகரொருவர் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) மொசப்பத்தேமிய பண்புகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

**30.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பரிதிவட்டம் எறிபவரின் சிலை,
(1) செயற்றிறனான மனித உருவங்களை ஆக்குவதில் திறமையாளரான பிரக்சி டெலஸ்சின் நிர்மாணிப்பாகும்.
(2) கிரேக்க விளையாட்டு வீரரொருவரைச் சிலையாக வடிப்பதற்கு பொலிக்லீட்ரசினால் எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(3) வெண்பளிங்கு ஊடகத்தில் அதி திறமையாளரான மயூரனின் சிலையொன்றாகும்.
(4) செயற்றிறனான அசையும் கொண்ணிலையொன்று சித்திரிக்கப்பட்டுள்ள பீடியஸ்சின் சிலையாகும்.
(5) மனித உருவின் சிக்கலான கொண்ணிலையொன்று சித்திரிக்கப்பட்டுள்ள கிரேக்கச் சிலையாகும். (.........)

- **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


K

L

M

N

O

**31.** **K** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வின்சன்ட் வான்கோவின் இவ்வோவியம்,
(1) கலைஞரின் விசேடமான கலை நுட்பங்களைச் சித்திரிக்கும் முதலாவது ஓவியமாகும்.
(2) கலைஞரின் வழமையான கலைத்துவப்பாணியை எடுத்துக்காட்டும் 'ஆர்லன்ஸ் பாலம்' ஆகும்.
(3) எண்ணெய் வர்ணத்தினால் பூரணப்படுத்தப்பட்ட 'வோட்டலுப் பாலம்' ஆகும்.
(4) கற்பனையான காட்சியொன்றினை யதார்த்தபூர்வமாகச் சித்திரிப்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(5) மனப்பதிவுவாதக் கலைக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும். (.........)

**32.** **L** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர்
(1) ரவீந்திரநாத் தாகூர் (2) அபனீந்திரநாத் தாகூர்
(3) நந்தலால் போஸ் (4) ஜெமினி ரோய்
(5) அம்ரிதா ஷேர்கில் (.........)

**33.** **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இவ்வோவியத்துக்கு ஹரி பீரிஸ் வழங்கியுள்ள பெயர்
(1) வைணவ பவான் (2) அல்பீசியா மரங்கள்
(3) சாந்தி நிகேதனம் (4) அம்மன் கோயில்
(5) வங்காளக் கிராமம் (.........)


**34.** **N** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்தவர்
(1) றிச்சர்ட் கேப்ரியேல் (2) மஞ்சுஸ்ரீ
(3) ஸ்டேன்லி அபேசிங்க (4) ஜே. டீ. ஏ. பெரேரா
(5) ஜஸ்டின் தெரனியகல (.........)

**35.** **O** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'குளியல் பேசின்' என்ற ஓவியம்,
(1) நடிகைகளின் பல்வேறு அசைவு நிலைகள் தொடர்பாகச் செய்யப்பட்ட ஓவியச் சித்திரிப்பாகும்.
(2) முப்பரிமாண இயல்புகளை வெளிப்படுத்தும் விதத்தில் ஒளியும் இருளும் பயன்படுத்தப்பட்டுள்ளதாகும்.
(3) யதார்த்தவாத வெளிப்பாட்டின்போது மனித உருவங்களை வரையும் கலைஞரின் ஆற்றலை எடுத்துக்காட்டுவதாகும்.
(4) இயற்கையான மனித உருவத்தை யதார்த்தமாகப் பயன்படுத்தியுள்ளமையாகும்.
(5) வர்ணத்துக்கும் ஒளிக்குமான தொடர்பு பற்றிய பஸ்ரல் ஊடகத்தினால் செய்யப்பட்டதோர் ஆய்வு முயற்சியாகும். (.........)

More Past Papers at
tamilguru.lk

[பக். 6 ஐப் பார்க்க

- **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தித் தெரிவுசெய்க.



**36.** இவ்வோவியம் எடுக்கப்பட்டது,
(1) தம்புள்ளை குகை விகாரையிலிருந்தாகும். (2) மெதவலை கற்றூண் விகாரையிலிருந்தாகும்.
(3) தெகல்தொருவ விகாரையிலிருந்தாகும். (4) தெல்வத்த விகாரையிலிருந்தாகும்.
(5) கத்தலுவ விகாரையிலிருந்தாகும். (.........)

**37.** இவ்வோவியத்துக்கான கருப்பொருளாக அமைந்தது,
(1) சுத்தசோம ஜாதகக் கதையிலிருந்த ஒரு சந்தர்ப்பமாகும்.
(2) பலி கொடுப்பதற்காகக் கொண்டு செல்லப்படுகின்ற பிள்ளைகள் பற்றிய செய்தியாகும்.
(3) பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காக வருகைதந்த மரதேவதையாகும்.
(4) வெஸ்ஸந்தர ஜாதகக் கதையிலுள்ளதொரு சம்பவமாகும்.
(5) சத்துபத்த ஜாதகக் கதையிலுள்ளதொரு மரதேவதையாகும். (.........)

**38.** இந்த ஓவியத்தைக் கொண்ட சித்திராவலியத் தொகுப்பில் வெளிப்படையாகத் தெரியும் இயல்பு,
(1) உருவங்களைச் சித்திரிப்பதிலுள்ள இருபரிமாண தன்மையாகும்.
(2) கோடுகளைக் கையாள்வதிலுள்ள உயிர்ப்பான தன்மையாகும்.
(3) வர்ணங்களைக் கையாள்வதிலுள்ள கவர்ச்சிகரமான தன்மையாகும்.
(4) உருவங்கள், முன்தளத்திலுள்ள கோடொன்றில் அமைந்திருத்தலாகும்.
(5) கோடுகள், வர்ணங்கள், உருவங்களின் அமைப்பிலுள்ள கலைப் பண்பாகும். (.........)

**39.** இவ்வோவியத்தை ஒழுங்கமைக்கும்போது ஓவியர்,
(1) செவ்வகப் பரப்பிற்குப் பொருந்தும் வகையில் உருவங்களைப் பயன்படுத்தியுள்ளார்.
(2) தொடர்ச்சியாகக் கதை கூறும் பாணிக்குப் பதிலாக குறித்த ஒரு சம்பவத்தைச் சித்திரித்துள்ளார்.
(3) யதார்த்தபூர்வமான சித்திரிப்பில் கவனம் செலுத்தியுள்ளார்.
(4) கதைச் சம்பவத்திற்குப் பொருத்தமான விதத்தில் உருவங்களையும் பாத்திரங்களையும் மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்துள்ளார்.
(5) பரிமாண இயல்புகள் பற்றிய தெளிவுடன் காட்சியை ஒருங்கிணைத்துள்ளார். (.........)

**40.** இந்த ஓவியத்தின் மூலம் ஓவியர், ரசிகர்கள் மத்தியில் உருவாக்கும் மனவெழுச்சியானது,
(1) இரண்டு பிள்ளைகளினதும் தனதும் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்ட மானிட உபாயமாகும்.
(2) பிள்ளைகளின் பாதுகாப்பு கருதி அவர்களை மரத்தில் கட்டிவைத்துள்ளமையாகும்.
(3) கவனமாக மரத்தின் மேலே ஏறி இருக்கின்றமையாகும்.
(4) பெரிய உருவமானவர், பயத்தினால் மரத்தில் ஏறியிருக்கின்றமையாகும்.
(5) பெரிய உருவமானவரின் சுயநலப் பண்பும் பிள்ளைகளில் அனுதாபம் காட்டாத தன்மையுமாகும். (.........)

4749
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

51 T I

## பகுதி II

* இப்பகுதி **மூன்று** உப பகுதிகளைக் கொண்டுள்ளது.
* ஒவ்வோர் உப பகுதியிலிருந்தும் **ஒவ்வொரு** வினா வீதம் தெரிவுசெய்து, **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக. (தேவையான இடங்களில் பரும்படிப் படங்களைப் பயன்படுத்துதல் உங்களுக்கு அனுகூலமாக அமையும்.)

### உப பகுதி - அ
### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**1.** அனுராதபுரக் காலத்தில் பிக்குகளின் தங்குமிடங்களாக அமைக்கப்பட்ட குகைகள் பிற்காலத்தில் சமயத் தேவை கருதி புதிய அங்கங்களை உள்ளடக்கிய மிக முன்னேற்றகரமான பௌத்த கட்டடக் கலை நிர்மாணிப்புகளாக மாற்றம் பெற்றன.

(i) அனுராதபுரக் காலத்தில் பிக்குமார்களின் மடங்களாக அமைக்கப்பட்ட **இரண்டு** குகைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) குகையொன்றை அடிப்படையாகக் கொண்டு அது குகைவிகாரை வரை வளர்ச்சியடைந்தவாற்றை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) பௌத்த கட்டடக் கலையில் இணைந்த 'பௌத்த மனை' எண்ணக்கருவை அறிமுகப்படுத்தி அவற்றுள் **இரண்டு** பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்)

**2.** 18 ஆம் நூற்றாண்டில் மலைநாட்டில் ஆரம்பித்த ஓவியக்கலை புதுப்பொலிவினைப் பெற்றதுடன் அது பௌத்தர்களின் சமய எழுச்சியை மேம்படுத்துவதற்கும் காரணமானது.

(i) கண்டிக் கால ஓவியங்களைக் காணத்தக்க குகை விகாரைகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) மிகப் புதிதாக ஆரம்பித்த இவ்வோவியக் கலை, முன்னைய காலக் கலைப்பாணியிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) "இவ்வோவியக்கலை மரபு தாழ்நாட்டு விகாரைகளுக்குப் பரவலடையும்போது பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டது." உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

### உப பகுதி - ஆ
### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**3.** புத்த ஜாதகக் கதைகள், புத்தரின் வாழ்வியற் சம்பவங்கள், வரலாற்றுச் சம்பவங்கள் ஆகியவற்றைத் தொனிப்பொருளாகக் கொண்டு பல நூற்றாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்ட பல ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களில் காணப்படுகின்றன.

(i) அஜந்தா ஓவியங்களில் சித்திரிக்கப்பட்டுள்ள புத்த ஜாதகக் கதைகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) பதினேழாம் இலக்கக் குகையில் காணத்தக்க 'சிங்கலாவதானய' ஓவியத்தின் உள்ளடக்கத்தையும் மாதிரியையும் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (06 புள்ளிகள்)

(iii) அஜந்தாவின் இறுதிக் காலப்பகுதியில் மகாயான பௌத்த செல்வாக்கினால் உருவான ஓவியங்கள், அங்குள்ள உயர்தரமான நிர்மாணிப்புகளாக மதிப்பிடப்பட்டுள்ளது. உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

[பக். 8 ஐப் பார்க்க

**4.** கட்டடக்கலை, சித்திரக்கலை ஆகியவற்றில் விசேட திறமைகளைக் காட்டிய பல்லவர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்த பின்னர் தென்னிந்தியாவில் ஆட்சிபீடமேறிய சோழர்களும் அதேபோன்று அக்கலைகளில் திறமையைக் காண்பித்தனர்.

(i) சோழக் கலைஞர்களால் நிர்மாணிக்கப்பட்ட **நான்கு** சமயச் சிலைகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) முதலாம் இராஜராஜனின் நிர்மாணிப்பான 'இராஜராஜேஸ்வரர்' கோயிலின் கட்டடக்கலைப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) பல்லவக் கலைஞர்களின் நிர்மாணிப்பான 'பஞ்சபாண்டவர் ரதக் கோயில்களைப்' பெயரிட்டு, அவற்றில் ஊடகங்கள் கையாளப்பட்டுள்ள விதம், கலைநுட்பப் பயன்பாடு என்பன பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

## உப பகுதி - இ

**(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)**

**5.** நைல் நதிக் கரையை அடிப்படையாகக் கொண்டு பல நூற்றாண்டுகளாக நிலவிய எகிப்திய நாகரிகம் பல கலை நிர்மாணங்களை உலகிற்கு வழங்கிய, நீண்டகாலம் நிலைதிருந்த ஒரு நாகரிகமாகும்.

(i) மரபுரீதியான பண்புகளை வெளிப்படுத்துகின்ற பழமையான எகிப்திய சிலைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) அபுசிம்பல் தேவாலய நிர்மாணிப்பின்போது கையாளப்பட்டுள்ள கலைநுட்பங்களை அறிமுகம் செய்து, அதன் அக்கால நிலையையும் இன்றைய நிலையையும் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) எகிப்தின் பழமையான கல்லறைகள், தேவாலயங்கள் ஆகியவற்றை அலங்கரிப்பதற்காக ஓவியங்களும் செதுக்கல்களும் பயன்படுத்தப்பட்ட விதம், அவற்றின் கலைப் பண்புகள் ஆகியன தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொள்க. (10 புள்ளிகள்)

**6.** கிரேக்க கலைப்பாணியைப் பின்பற்றிய உரோமக் கலைஞர்கள், பிற்காலத்தில் கிரேக்கர்களை மிஞ்சியவர்களாக கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் அதியுன்னத திறமையை வெளிப்படுத்தினர்.

(i) உரோமக் கலைஞர்களின் கட்டடக்கலை நிர்மாணிப்புகள் **நான்கினைப்** பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் நீர் பெயரிட்ட ஏதேனும் ஒன்றின் நிர்மாண மாதிரி தொடர்பாக சுருக்கமான அறிமுகம் ஒன்றை மேற்கொள்க. (06 புள்ளிகள்)

(iii) உரோமர்களின் தலைச்சிற்பங்கள் **இரண்டினை** அறிமுகப்படுத்தி, அவை உயர்தரமான நிர்மாணிப்புகளாக மதிப்பீட்டுக்குட்படுகின்றமைக்கான காரணங்களை ஆராய்க. (10 புள்ளிகள்)

***

More Past Papers at
tamilguru.lk

ஸியலு ம ஹிமிகம் ஏவிரிணி/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | | |
|---|---|---|---|
| චිත්‍ර කලාව II<br>சித்திரக்கலை II<br>Art II | 51 T II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

- உமது **சுட்டெண்ணைச்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள **வரைதல் தாளைப்** (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்

பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள்தொகுதியை வரைந்து வர்ணந்தீட்டுக.

❊ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.

❊ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.

❊ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந்தீட்டுக.

❊ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.

❊ பொருள்தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.

❊ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள்தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.

❊ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

***

More Past Papers at
tamilguru.lk

4749

AL/2017/51/T-III

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2017 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2017 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2017

| | | | |
|---|---|---|---|
| චිත්‍ර කලාව III<br>சித்திரக்கலை III<br>Art III | 51 T III | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**அறிவுறுத்தல்கள் :**

- ※ கீழே தரப்பட்டுள்ள **அ, ஆ, இ** ஆகிய பகுதிகளிலிருந்து **ஒரு** பகுதியை மாத்திரம் தெரிவுசெய்க. அதிலிருந்து **ஒரு** தலைப்பை மாத்திரம் தெரிவுசெய்து, **வர்ணச் சித்திரம்** ஒன்றை வரைக.
- ※ உமது பரீட்சைச் **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த வினாவின் **இலக்கத்தையும்** சித்திரம் வரையும் தாளின் **மறுபக்கத்தில்** தெளிவாக எழுதுக.
- ※ சித்திரத்தைக் கையளிக்கும்போது அது உலர்ந்திருத்தல் அவசியமாகும். ஈரமான சித்திரங்கள் ஒன்றுடனொன்று ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளமையினால் அது உமக்குப் பாதகமானதாக அமையலாம்.
- ※ விரும்பிய வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும். (நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது சிலவற்றின் கலவை)
- ※ தேவைப்படுவோருக்குத் திசுத்தாள் வழங்கப்படும்.

## பகுதி - அ
### சித்திர ஒழுங்கமைப்பு

❒ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவுசெய்க.

**1.** யாத்திரையில் ஈடுபட்டுள்ள பக்தர்கள் **அல்லது** குளம் ஒன்றினால் சூழப்பட்ட தீவின் மத்தியில் அமைந்துள்ள வழிபாட்டுத்தலம்

**2.** இரவில் நடைபெறும் தொவில் சடங்கு **அல்லது** வயல்வேலையில் ஈடுபட்டுள்ள பெண் விவசாயிகள்

**3.** நதியொன்றில் அல்லது குளமொன்றில் நீராடும் காட்டுயானைகள்

## பகுதி - ஆ
### அலங்கார ஆக்கம்

❒ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவுசெய்க.

**4.** சீத்தை அச்சிடலுக்குப் பொருத்தமான பரவல் அலங்காரமொன்றின் $9 \times 9$ அங்குலப் பகுதியொன்றை மல்லிகைப் பூக்கள், இலைகளைக் கொண்டு திட்டமிடுக. (முடிவுறும் பகுதிகள் ஒன்றுடனொன்று பொருந்தக் கூடியவாறு அமைதல் வேண்டும்.)

**5.** $4 \times 3$ அடி அளவுடைய மேசை விரிப்பொன்றுக்குப் பொருத்தமான முழுத்தள அலங்காரமொன்றை சுதந்திரமான வடிவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்குக. மேசையின் வெளிப்புறமாக சுமார் ஒரு அடி அளவான பகுதியொன்று அமையுமாறு மேசைவிரிப்பைத் திட்டமிடுக.

**6.** உயரம் ஓர் அடியையும் மத்தியில் 9 அங்குல விட்டத்தையும் கொண்டதாக பட்டறையில் கடையப்பெற்ற மரத்தாலான (மரக்கடைச்சல்) பூச்சாடி ஒன்றை, அப்பட்டறையின் துணையுடன் அரக்கினால் வர்ணமூட்டி அலங்கரிக்கத்தக்க அலங்காரமொன்றைத் திட்டமிடுக.

## பகுதி - இ
### கிறபிக் சித்திர நிர்மாணிப்பு

❒ பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றை** மட்டும் தெரிவுசெய்க.

**7.** 'கல்வியே வாழ்வில் நிரந்தரம்' என்ற தலைப்பில் அழகிய சுவரொட்டி ஒன்றை நிர்மாணித்து, வர்ணமிடுக.

**8.** இரவு நேர இசைக்கச்சேரி ஒன்றுக்கான (டிஜிட்டல் முறையில் அச்சிடத்தக்க) விளம்பரப்பலகையொன்றை $8 \times 4$ அடி அளவில் திட்டமிட்டு நிர்மாணிக்குக.

**9.** 'இலைமறைகாய்களாய் ஓவியர்கள்' என்ற தலைப்பிலான கவிதை நூலொன்றின் மேலட்டைக்குப் பொருத்தமான நிர்மாணிப்பொன்றை மேற்கொள்க. தேவையானவாறு எழுத்துகளைப் பயன்படுத்துக.

※※※